





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.8.2025) தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணபித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தை தொடங்கி வைத்து, அதியமான்கோட்டை மற்றும் பாலஜங்கமனஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த 5 விவசாயிகளுக்கு வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்கினார். இந் நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர் க.நந்தகுமார், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.8.2025) முகாம் அலுவலகத்தில், கழக தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் அவர்கள் மனைவியுடன் சந்தித்து, தனது இரட்டை பேரக் குழந்தைகளுக்கு பெயர் சூட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, முதலமைச்சர் அவர்கள் ஆண் குழந்தைக்கு ”அகம் என்றும், பெண் குழந்தைக்கு “நற்றிணை” என்றும் பெயர் சூட்டினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவரது மகள் டாக்டர் கோமல் தமிழ்தாசன் மற்றும் மருமகன் டாக்டர் தணிகை அரசு ஆகியோர் உள்ளார்கள்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லத்தில் பிறந்த கலைஞரின் மனசாட்சியாக விளங்கிய முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிலைக்கு நாகை மாவட்டக் கழக செயலாளர். தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என் கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் முன்னாள் அமைச்சர் உ. மதிவாணன். தலைமை செயற்குழு உறுப்பினர் ப.கோவிந்தராசன், ஒன்றிய கழக செயலாளர்கள் மகா குமார், கே.பழனிப்பன், சோ.பா. மலர்வண்ணன், சிக்கல் என்.ஆனந்த், நாகை நகர கழக செயலாளர் இரா. மாரிமுத்து மற்றும் பொதுகுழு உறுப்பினர்கள் இல. பழனியப்பன், கோசி குமார் மற்றும் பலர் உள்ளனர்.

## பொதுமக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை

# தங்கள் தலைமை மேலும் வலுப்படுத்தட்டும்!

### ‘ஆம் ஆத்மி’ ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்தநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக.18–**

**ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–**



ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள். தாங்கள் நல்ல உடல்நலத்தோடு நீண்ட காலம் மக்கள் சேவையாற்றி, வெற்றியைப் பெற வாழ்த்துகிறேன்.

பொதுமக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தைத் தங்கள் தலைமைத்துவம் மேலும் வலுப்படுத்தட்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் அவர்களிடம் சுதந்திரத் திருநாள் விழாவில், கல்பனா சாவ்லா விருதினை பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி துளசிமதி முருகேசன், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகளைப் பெற்ற விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த சி.சந்துருகுமார், திருநெல்வேலி மாவட்டத்தை சேர்ந்த மு. ஜெயக்குமார், சேலம் மாவட்டத்தை சேர்ந்த த. மாரியப்பன், சென்னை மாவட்டத்தை சேர்ந்த செல்வி ம.காஜிமா, புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த திருமதி அ.லாவண்யா, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த செல்வி கு.கௌரி ஆகியோர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 15.8.2025 அன்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, மாரியம்மன் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 06.08.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிக்கு மின்னணு குடும்ப அட்டையினை வழங்கினார். உடன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

பெரம்பலூர், ஆக. 18 –

பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று 18.08.2025 திங்கட்கிழமை நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., அறிவுறுத்தலின்படி, போக்குவரத்துத் துறை மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க,

பெரம்பலூர் மாவட்ட கழக செயற்குழு கூட்டம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், கே.என்.அருண் நேரு.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோரது முன்னிலையில் , இன்று (18.08.2025, திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு, பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.



இதில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்! முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 13.08.2025, அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும் கிளைச் செயலாளர்கள் கூட்டங்கள் நடத்தி, மினிட் புத்தகங்களை தலை மைக்கு வழங்குவது குறித்து, மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்ட பிரதிநிதி தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெ.மணி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2025 ஆகஸ்ட் 4 (திங்கட்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.""என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு ம. கரிகாலன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் வடக்கு ஒன்றியம்,

அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதியாக

திரு. ம.கரிகாலன்

எண். 10, குட்டையன் செட்டியார் சந்து,

அரிமளம் 622 201, திருமயம் தாலுகா,

புதுக்கோட்டை மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



முத்தமிழ்றிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும், கழகத்தின் மூளையாக செயல்பட்ட வருமான முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாளை முன்னிட்டு சின்னவீரம் பட்டியில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாவட்டப் பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.எம்.தங்கராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் சியாம் பிரசாத், பொதுக்குழு உறுப்பினர் யூ.என். பி.குமார் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.